# *இந்திய அரசு*
# *பத்திரிகை தகவல் அலுவலகம்*
# *தகவல் ஒலிபரப்பு அமைச்சகம்*
# *சென்னை*

***தேதி**: 12.04.2018*

## ***<u>அலுவலக ஆணை</u>***

சென்னை பத்திரிகை தகவல் அலுவலகத்தின் கீழ்காணும் அதிகாரிகள் மேல்முறையீட்டு ஆணையர் மற்றும் மத்திய பொதுத்தகவல் அதிகாரி என அவர்கள் பெயருக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு - 5(I)ன்படி நியமிக்கப்படுகின்றனர்.

**<u>மேல்முறையீட்டு ஆணையர்</u>**: (1) திரு. குருபாபு பலராமன்,
இணை இயக்குநர்,
பத்திரிகை தகவல் அலுவலகம்,
எண்.26, ஹாடோஸ் சாலை,
சாஸ்திரி பவன், சென்னை -6
தொ.பேசி: 044 - 2822 8147 & 48
தொலைநகல்: 044-2822 6977

**<u>மத்திய பொதுத் தகவல் அதிகாரி</u>**: (1) திரு. நதீம் து்ஃபாயில்,
துணை இயக்குநர்,
பத்திரிகை தகவல் அலுவலகம்,
எண்.26, ஹாடோஸ் சாலை,
சாஸ்திரி பவன், சென்னை -6
தொ.பேசி: 044 - 2822 8147 & 48
தொலைநகல்: 044-2822 6977

**<u>கட்டணம் செலுத்துதல்:</u>**

சட்டத்தின் பிரிவு -6 துணைப்பிரிவு - (1) ன் கீழ் தகவல் பெறுவதற்குச் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளுடன் விண்ணப்பக் கட்டணம் ரூ.10/- ரசீது பெற்றுக்கொண்ட ரொக்கமாகவோ, கேட்பு வரைவாகவோ வங்கியாளர் காசோலையாகவோ சென்னை பத்திரிகை தகவல் அலுவலக ஊடக மற்றும் தகவல் தொடர்பு அதிகாரிக்குச் செலுத்தக்கூடிய வகையில் இணைக்கப்பட வேண்டும்.

1. கோரப்பட்ட தகவலானது அச்சு வடிவத்திலோ நகல் வடிவத்திலோ வழங்கப்படும்போது பக்கம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் கட்டணமும், குறுந்தகடாகப் பெறுவதற்கு ரூ.100/- கட்டணமும் செலுத்த வேண்டும்.
2. கூடுதல் கட்டணம் தேவைப்படும்போது அது குறித்த விவரம்: கட்டணக் கணக்கீடு எவ்வாறு செய்யப்பட்டது என்ற விளக்கத்துடன் எழுத்து மூலம் அனுப்பப்படும்.
3. மத்திய பொதுத் தகவல் அதிகாரியால் இவ்வாறு விதிக்கப்படும் கட்டணத்தை மறுஆய்வு செய்ய கோரும் விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டு ஆணையத்தில் சமர்ப்பிக்கலாம்.
4. வறுமைக்கோட்டுக்குக் கீழே வசிப்பவர்களிடமிருந்து எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது.
5. மத்திய பொதுத் தகவல் அதிகாரி குறிப்பிட்ட காலவரம்புக்குள் தகவல் அளிக்கத் தவறினால் மனுதாரருக்குக் கட்டணம் ஏதுமின்றி அவர் கேட்ட தகவல் அளிக்கப்படும்.

-----